# அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ‘‘பீ’’ இன் 2012 திசெம்பர் 31

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ‘‘பீ’’ இன் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுப் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

2010 ஆம் ஆண்டிற்காக 2012 இல் பெறப்பட்ட ரூபா 21,730 தொகையான வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கான கணக்கிற்குள் தவறாக எடுக்கப்பட்டிருந்தது, ஆதலால் அதேதொகையால் முதலீட்டு வருமானம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1979 யூன் 01 வெள்ளிக்கிழமை ஆந்திகதிய 38/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி<br>விதி 04 | உறுப்பினர்களின் செலவில் காணப்படுகின்ற சகல பணங்களும் ஏதாவது அரசாங்க வங்கிகளின் தொகுதிக்கடன்களின் அல்லது அரங்க பிணையங்களில் முதலீடு செய்யப்பட வெண்டும். எவ்வாறாயினும் சகல நிதிகளும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டினால் ரூபா 2,299,550 தொகையான வட்டியினை உறுப்பினர்களின் கணக்குகளிற்குச் செலவு வைப்பதனை விளைவித்திருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டில் உறுப்பினர் கணக்குகளிற்குச் செலவு வைக்கப்பட்ட ரூபா 1,813,064 ஆன வட்டியுடன் ஒப்பிடுகையில் ரூபா 486,486 அல்லது 26.83 சதவீதத்தால் வீழ்ச்சியைக் காட்டியது. மீளாய்வாண்டின் போதுவட்டி வீதத்தின் அதிகரிப்பு எதிர்மறையான போக்கிற்கு பிரதான காரணமாக இருந்தன.

(ஆ) கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, கடந்த 3 ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் கீழே தரப்படுகின்றன.

| | | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகளின் வட்டி வருமானம் | 1,280,552 | 1,675,320 | 1,976,387 | 2,417,405 |
| (ii) | உறுப்பினர் கடன்கள் மீதான வட்டி வருமானம் | 110,860 | 67,197 | 89,225 | 73,230 |
| (iii) | உருவாக்கப்பட்ட மொத்த வட்டி வருமானம் | 1,391,412 | 1,742,517 | 2,065,612 | 2,490,635 |
| (iv) | வரிச் செலவுகள் | (187,232) | (181,306) | (212,149) | (284,719) |
| (v) | தேறிய வட்டி வருமானம் | 1,204,180 | 1,561,211 | 1,853,463 | 2,205,916 |
| (vi) | அரச ஈட்டு முதலீட்டு வங்கியால் குறைநிரப்பு பங்களிப்பு | 1,095,370 | 251,853 | 268,028 | 626,569 |
| (vii) | உறுப்பினர்களிற்கு செலவு வைக்கப்பட்ட மொத்த வட்டி | 2,299,550 | 1,813,064 | 2,121,491 | 2,832,485 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகளின் வட்டி வருமானம் 2009 - 2012 வரையான காலப்பகுதியில் ரூபா 2,417,405 இலிருந்து ரூபா 1,280,552 ஆக அல்லது 47.02 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

ஆ) உறுப்பினர்களிற்கான கடன்கள் மீதான வட்டி வருமானம் 2009 - 2012 வரையான காலப்பகுதியில் ரூபா 73,230 இலிருந்து ரூபா 110,860 ஆக அல்லது 51.38 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

இ) குறைநிரப்பு பங்களிப்பு ரூபா 626,569 இலிருந்து ரூபா 1,095,370 ஆக அல்லது 74.82 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், 2009 - 2012 வரையான காலப்பகுதியில் அங்கத்தவர்களின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட வட்டி ரூபா 2,832,485 இலிருந்து ரூபா 2,299,550 ஆக அல்லது 18.81 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்தது.

## 2.2. இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) நிதியம் முதலீட்டின் தேவையை கருத்திற்கொள்ளாமல் முதலீடு செய்யப்பட்ட காரணத்தால் முதரிவுத் திகதிக்கு முன்னர் மீளெடுக்கப்பட்டிருந்தது, ஆதலால், நிதியம் ரூபா 142,865 நட்டம் அடைந்திருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| நிலையான வைப்பு இல | காலப்பகுதி | வீதம் (%) 2011 | தொகை ரூபா | மீளப்பெற்ற திகதி | வட்டி வீதம் (%) 2012 | தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|
| எவ்/001/000096 | 2011.08.13- 2012.08.13 | 10 | 517,591.70 | 2012.08.09 | 8.5 | 43,995.29 |
| 001/25/31409 | 2011.11.23- 2012.11.24 | 8.5 | 484,647.81 | 2012.10.08 | 5.5 | 26,655.63 |
| 1/25/53057 | 2011.12.30- 2012.12.31 | 9 | 347,835.11 | 2012.11.12 | 8.63 | 30,018.17 |
| எவ/001/04/001 2656 | 2011.09.07- 2012.09.07 | 8.5 | 767,198.99 | 2012.08.09 | 5.5 | 42,195.94 |
| | | | | | | 142,865.03 |

(ஆ) முதிர்வுத் திகதிக்கும் மீளெடுக்கப்பட்ட திகதிக்கும் இடைப்பட்ட காலத்திற்காக வட்டி பெறப்பட்டிருக்கவில்லை. ஆதலால், நிதியம் ரூபா 99,207 மதிப்பிடப்பட்ட நட்டத்தை அடைந்திருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| நிலையான வைப்பு இல | முதிர்வுத் திகதி | மீளப்பெறல் திகதி | மிகையான நாட்கள் (வட்டி இல்லாமல்) | வட்டி இழப்பு ரூபா |
|---|---|---|---|---|
| எவ்/001/25/0020811 | 2012.11.12 | 2012.12.06 | 25 | 18,409 |
| 0-01/25/0020572 | 2012.12.06 | 2012.12.06 | 54 | 26,060 |
| 1/25/0028918 | 2012.11.09 | 2012.12.06 | 27 | 3,640 |
| 1/25/0031011 | 2012.10.21 | 2012.11.12 | 22 | 3,129 |
| 001/25/0051824 | 2012.09.30 | 2012.10.08 | 9 | 2,572 |
| 1/25/55337 | 2013.09.28 | 2012.11.12 | 46 | 37,093 |
| எவ்/001/04/0025136 | 2012.10.09 | 2012.11.12 | 35 | 4,095 |
| எவ்/001/25/0041355 | 2012.07.24 | 2012.08.09 | 17 | 4,209 |
| மொத்தம் | | | | 99,207 |

### 2.3 உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள்

கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | |
|---|---|---|
| | 2012 | 2011 |
| | ரூபா | ரூபா |
| முன் கொண்டுவரப்பட்ட மீதி | 892,467 | 1,534,010 |
| கூட்டு: ஆண்டின் போது உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் | 350,000 | 120,000 |
| | 1,242,467 | 1,654,101 |
| கழி : ஆண்டின் போதான அறவீடுகள் | (1,235,193) | (761,543) |
| முன்கொண்டு செல்லப்பட்ட மீதி | 7,274 | 892,467 |

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 230,000 அல்லது 191.6 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2012 ஆம் ஆண்டில் அறவீடுகள் ரூபா 473,650 அல்லது 62.20 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 2.4 உறுப்பினர்களின் உதவுதொகை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் உறுப்பினர்களின் கணக்குகளிற்கு செலவு வைக்க்பட்ட உறுப்பினர் பங்களிப்பு வங்கி பங்களிப்பு வட்டி என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2012 | | | | 2011 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உறுப்பினர் களின் பங்களிப்பு | வங்கி பங்களிப்பு | செலவு வைக்கப் பட்ட வட்டி | மொத்தம் | உறுப்பினர் களின் பங்களிப்பு | வங்கி பங்களிப்பு | செலவு வைக்கப் பட்ட வட்டி | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| முன்கொண்டு வரப்பட்ட மீதி | 3,325,548 | 4,981,852 | 12,151,352 | 20,458,752 | 3,811,759 | 5,709,077 | 12,871,285 | 22,392,121 |
| கூட்டு : | | | | | | | | |
| ஆண்டின் போதான பங்களிப்பு | 231,543 | 347,313 | 2,271,478 | 2,850,334 | 292,647 | 438,971 | 1,813,064 | 2,544,681 |
| மொத்தம் | 3,557,091 | 5,329,165 | 14,422,830 | 23,309,086 | 4,104,406 | 6,148,048 | 14,684,349 | 24,936,802 |
| கழி: | | | | | | | | |
| ஆண்டின் போது செலுத்தப்பட்டவை | 2,560,382 | 3,834,276 | 10,198,110 | 16,592,768 | 778,857 | 1,166,196 | 2,532,997 | 4,478,050 |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 996,709 | 1,494,889 | 4,224,720 | 6,716,318 | 3,325,549 | 4,981,852 | 12,151,352 | 20,458,752 |

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2012 ஆம் ஆண்டில் நிதியத்திற்கான மொத்த பங்களிப்புகள் ரூபா 305,653 அல்லது 12.01 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் உறுப்பினர்களுக்கு ரூபா 16,592,768 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.